**பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்கான உறுப்பினர் ஒருவரை நியமித்தல்**

பகிரங்க சேவை ஆணைக்குழுவில் உறுப்பினர் ஒருவரின் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆர்வம் காட்டும் தனிநபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 54 ஆம் உறுப்புரையில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறாக, பாராளுமன்ற உறுப்பினராக, மகாண சபை உறுப்பினராக, உள்ளூரதிகாரசபை உறுப்பினராக இருக்கும் எவரும் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்குத் தகைமையுடையோராக இருக்கமாட்டார்கள். மேலும் பகிரங்க சேவை ஆணைக்குழுவின் ஓர் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கு முன்பதாக, அரச சேவையில் அரச உத்தியோகத்தராக அல்லது நீதித்துறை உத்தியோகத்தராக இருந்த ஆள் ஒவ்வொருவரும் அவரின் நியமனத்திற்கு முன்பதாக, அவ்வாறான நியமனம் பயனுறத் தொடங்கியதும், அத்தகைய பதவிகளில் இருந்து நீங்க வேண்டும் என்பதுடன் பகிரங்க அலுவலரொருவராக அல்லது நீதித்துறை அலுவலரொருவராக மேற்கொண்டு நியமிக்கப்படுவதற்கு தகவுழைடயவராதலுமாகாது.

www.parliament.lk எனும் பாராளுமன்ற இணையத்தளத்தில் 'பகிரங்க *சேவை ஆணைக்குழுவிற்கான (பசேஆ) உறுப்பினர்கள் நியமனம்'* என்ற துரித இணைப்பில் வழங்கப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு, முறையாகப் பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்பங்கள், 2024 செப்டெம்பர் 23 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர்;

> **அரசியலமைப்புப் பேரவையின் செயலாளர் நாயகம்**
> **அரசியலமைப்புப் பேரவை - அலுவலகம்**
> **இலங்கைப் பாராளுமன்றம்**
> **ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே.**

எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும் அல்லது constitutionalcouncil@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில்/ மின்னஞ்சலின் விடயமாக 'பகிரங்க சேவை ஆணைக்குழுவிற்கான உறுப்பினர்கள் நியமனம்' எனக் குறிப்பிடவும்

அரசியலமைப்புப் பேரவையின் கட்டளையின் பேரில் வெளியிடப்பட்டது.

**அரசியலமைப்புப்  பேரவையின் செயலாளர் நாயகம்**

**அரசியலமைப்புப்  பேரவை - அலுவலகம்**

**இலங்கைப் பாராளுமன்றம்**

**ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே.**

2024.08.30